# சிறப்புக் கல்விக்கான வழிகாட்டி

## பெற்றோர் / பாதுகாவலர்கள் / பராமரிப்பாளர்களுக்குரியது

tdsb | சிறப்புக் கல்வி மற்றும் உள்ளடக்கல்

Toronto District School Board

June 2023

*இந்த வழிகாட்டியை பிரெய்லி (Braille), பெரிய அச்சு அல்லது ஆடியோ வடிவத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் விரும்பினால், தயவுசெய்து உங்கள் பிள்ளையின் பாடசாலை அதிபரைத் தொடர்பு கொள்ளவும். உங்கள் பிள்ளையின் பாடசாலை அதிபர் மூலம், இந்த வழிகாட்டியின் விளக்கத்திற்கு உதவுவதற்கு மொழிபெயர்ப்பாளர்களையும் நீங்கள் அணுகலாம். இந்த வழிகாட்டியைப் படித்த பிறகு, உங்களுக்கு மேலதிகத் தகவல்கள் தேவைப்பட்டால், தயவுசெய்து உங்கள் பிள்ளையின் பாடசாலை அதிபரைத் தொடர்பு கொள்ளவும்.*

*இந்த வழிகாட்டி முழுவதும், "பெற்றோர் " என்ற வார்த்தை பாதுகாவலர்கள் மற்றும் பராமரிப்பாளர்களை உள்ளடக்குகின்றது.*

*இந்த வழிகாட்டியில் உள்ள சில தகவல்கள், ஒன்ராறியோக் கல்வி அமைச்சின் ஒன்ராறியோ மழலையர் பள்ளி தொடக்கம் 12 ஆம் வகுப்பு வரை 12– கொள்கை மற்றும் ஆதார வழிகாட்டி, பின்னிணைப்பு D-1: சிறப்புக் கல்விக்கான பெற்றோருக்குரிய வழிகாட்டியின் மாதிரி மற்றும் ரொறன்ரோ மாவட்டப் பாடசாலைச் சபையின் சிறப்புக் கல்வி மற்றும் உள்ளடக்கல் துறையினால் தயாரிக்கப்பட்ட பிற ஆவணங்களிலிருந்து நேரடியாகப் பிரதிபடுத்தப்பட்டது .*

## இந்த வழிகாட்டியின் நோக்கம்

பாடசாலைச் சபைகள் தங்கள் விதிவிலக்கான தேவைகள் உள்ள மாணவர்களுக்குச் சிறப்புக் கல்வித் திட்டங்கள் மற்றும் சேவைகளை வழங்க வேண்டும் அல்லது வேறு ஒரு சபையிடமிருந்து அவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனக் கல்விச் சட்டம் கோருகின்றது. பெற்றோர்/ /பாதுகாவலர்கள்/ பராமரிப்பாளர்களுக்குரிய, சிறப்புக் கல்வி மற்றும் உள்ளடக்கலுக்கான இந்த வழிகாட்டியில், ரொறன்ரோ மாவட்டப் பாடசாலைச் சபையில் (TDSB) வழங்கப்படும் சிறப்புக் கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்கான திட்டங்கள் மற்றும் சேவைகள் பற்றிய தகவல்கள் உள்ளடங்குகின்றன. இது ஒரு மாணவரை விதிவிலக்கான தேவைகள் உள்ளவராகக் கண்டறிதல், பயிற்சிக் திட்டங்களைத் தீர்மானித்தல் மற்றும் பெற்றோர்கள் IPRC உடன் உடன்படாதபோது அத்தகைய முடிவுகளை எதிர்த்து மேன்முறையீடு செய்தல் போன்ற இனங்காணல், பயிற்சித் திட்டம் மற்றும் மறுஆய்வுக் குழு – (Identification, Placement and Review Committee - IPRC) இன் நடைமுறைகளை விபரிக்கின்றது.

## பெற்றோரின் கரிசனைக்கான ஒழுங்குமுறை

உங்கள் கேள்விகள், கரிசனைகள் மற்றும் பரிந்துரைகளுக்கு மதிப்பளித்து, இயலுமானவரையில் விரைவாக அவற்றைத் தீர்ப்பதற்கான எல்லா முயற்சிகளையும் TDSB செய்து வருகிறது. பாடசாலை அடிப்படையிலான கரிசனைகளுக்கு, உங்கள் பிள்ளையின் வகுப்பறை ஆசிரியரை முதலிலும், அதைத் தொடர்ந்து பாடசாலை அதிபர் மற்றும் பாடசாலைக் கண்காணிப்பாளர் ஆகியோரையும் தொடர்பு கொள்ள வேண்டும். பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட இந்த ஊழியர்கள் உங்களுக்கும் உங்கள் பிள்ளைக்கும் ஆதரவளிக்கத் தேவையான சிறப்புக் கல்வித் துறை மற்றும் பிற துறைகளைச் சேர்ந்த ஊழியர்களுடன் நெருக்கமாகப் பணியாற்றுவார்கள்.




## சிறப்புக் கல்விக்கான TDSB இன் தொலைநோக்கு

ரொறன்ரோ மாவட்டப் பாடசாலைச் சபை (TDSB) மாணவர்களின் சாதனை மற்றும் நல்வாழ்வுக்கு உறுதிபூண்டுள்ளது. மாணவர்கள் வெவ்வேறு வழிகளில் வளர்ச்சியடைந்து கற்றுக்கொள்வதையும் சில மாணவர்களுக்கு அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யச் சிறப்புக் கல்வித் திட்டங்கள் மற்றும் சேவைகள் தேவைப்படுகின்றன என்பதையும் நாங்கள் அங்கீகரிக்கிறோம். பெற்றோர்கள் மற்றும் மாணவர்களுடன் ஒரு மரியாதையான மற்றும் வெளிப்படையான வழிமுறையில் ஒத்துழைத்துப் பணியாற்றுவதற்கும் குடும்பங்களுடனான எங்கள் கூட்டாண்மைக்கு மதிப்பளிப்பதற்கும் TDSB ஊழியர்கள் உறுதிபூண்டுள்ளனர். தங்கள் பிள்ளையின் ஆசிரியர்களையும், அதிபரையும் அணுகித் தங்கள் பிள்ளையைப் பற்றிய கலந்துரையாடல்களில் தொடர்ந்து ஈடுபடுமாறு பெற்றோர்களை நாங்கள் ஊக்குவிக்கிறோம். மாணவர்களின் வெற்றியை உறுதி செய்வதற்குப் பெற்றோர்

மற்றும் பாடசாலை ஊழியர்களிடையே தகவல்களைப் பகிர்ந்து கொள்வது மிகவும் முக்கியமானது.

அனைத்து ஊழியர்களுடனும் இணைந்து, அனைத்து மாணவர்களுக்கும் கற்றல் வாய்ப்புகளுக்குச் சமமான அணுகலை வழங்குவதற்குச் சிறப்புக் கல்வித் துறை உறுதிபூண்டுள்ளது. இதில் உள்ளடக்கல், மனித உரிமைகள், ஒடுக்குமுறை எதிர்ப்பு, சமத்துவம், திறன் அடிப்படையிலான பாகுபாட்டுக்கு எதிர்ப்பு மற்றும் இனவெறிக்கு எதிரான நமது தொடரும் உறுதிப்பாடு ஆகியவை அடங்கும். இந்த அர்ப்பணிப்பு TDSB சமத்துவக் கொள்கையின் அடிப்படையில் சீரமைக்கப்பட்டுள்ளதுடன் அனைத்துத் தர நிலைகளிலும் உள்ள திட்டமிடல்கள் அனைத்தையும் ஆதரிக்கிறது.

வித்தியாசமான அடையாளங்களைக் கொண்ட மாணவர்களை உள்ளடக்கும் கற்றல் சூழலை உருவாக்குவதற்கும் சிறப்புக் கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்கு எவ்வாறு சேவை செய்வது என்பதைப் பற்றி ஆழமாகப் புரிந்து செயற்படும் ஊழியர்களின் திறனை வளர்ப்பதற்கும் TDSB உறுதிபூண்டுள்ளது. TDSB மாணவர்களிடம் அதிக எதிர்பார்ப்புகளை வைத்திருப்பதுடன் அவர்கள் வெற்றியின் பாதையில் நிற்கும் முறைமை சார் தடைகளை நீக்குவதன் மூலம் அவர்களின் சாதனை மற்றும் நல்வாழ்வுக்கு உதவுகிறது.

சிறப்புத் தேவைகள் உள்ள விதிவிலக்கான மாணவர்கள் சிறப்புக் கல்வி வகுப்புகளில் சேர்க்கப்படுவதைக் கருத்திற் கொள்வதற்கு முன்னர், தகுந்த சிறப்புக் கல்விச் சேவைகளுடன் வழக்கமான வகுப்புகளில் சேர்க்கப்படுவதைப் பாடசாலைச் சபைகள் பரிசீலிக்க வேண்டும் என ஒன்ராறியோச் சட்டவிதிமுறை 181/98 கேட்டுக்கொள்கின்றது. TDSB இல் மாணவர்கள் கற்றுக் கொள்ளும்போது, அவர்கள் திறன்களை வளர்த்துக் கொள்கிறார்கள், அதனால் அவர்களின் சிறப்புக் கல்விச் சேவை மற்றும் திட்டத்தில் காலப்போக்கில் மாற்றம் தேவை என்பதைப் புரிந்துகொண்டு நாங்கள் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றோம். உரிய வளங்களைக் கொண்ட அருகிலுள்ள பாடசாலைகளில் வயதுக்கு ஏற்றபடி, வழக்கமான வகுப்புகளில் வரவேற்கப்பட்டும், சேர்க்கப்பட்டும், ஆதரவளிக்கப்பட்டும் கற்கும் மாணவர்கள், பாடசாலை வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் கற்கவும், பங்களிக்கவும் மற்றும் பங்கேற்கவும் முடியும். மாற்றுத்திறனாளிகள் மற்றும் வித்தியாசமான

அடையாளங்களைக் கொண்டவர்கள் போன்ற வரலாற்று ரீதியாக விலக்கப்பட்ட குழுக்களுக்கு மதிப்புமிக்க கற்றல் வாய்ப்புகளை இது அனுமதிக்கிறது.

மாணவர்களுக்கான சிறப்புக் கல்வி ஆதரவுகள் மற்றும் சேவைகளை வழங்குவதன் மூலம் TDSB இல் சமத்துவமான பலன் ஆதரிக்கப்படுகிறது. இந்த வரைமுறையில் பாடசாலையின் உள்ளேயும் பயணிப்பதற்குமான ஆதரவு, குறுகிய காலத்துக்குத் தலையிடும் சேவைகள் மற்றும் வழக்கமான வகுப்புகளில் இடம்பெறும் பயிற்சித் திட்டங்களுடன் தனித்துவமான பயிற்சிகள் தேவைப்படும் மாணவர்களுக்கான சுய-கட்டுமான வகுப்புகள் ஆகியவை அடங்கும் .

TDSB இன் சிறப்புக் கல்வி தொடர்பான தொலைநோக்கு பின்வரும் கொள்கைகள் மூலம் வழிநடத்தப்படுகின்றது:

- அனைத்து மாணவர்கள், அவர்களது குடும்பத்தினர் மற்றும் அவர்களை ஆதரிக்கும் ஊழியர்கள் யாவரும் மரியாதையுடன் நடத்தப்படுவதற்கு உரிமை உள்ளவர்கள்.
- அனைத்து மாணவர்களுக்கும் அவர்களின் திறமை மற்றும் வளர்ச்சி தேவைப்படும் பகுதிகளுக்குப் பதிலளிக்கும் வகையில் உருவாக்கப்படும் திட்டத்திற்கான உரிமை உள்ளது.
- இயலுமானவரையில் தங்கள் அருகிலுள்ள பாடசாலையில் தங்கள் தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய பயிற்சிக்கூடங்கள், திட்டங்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் உரிமை சகல மாணவர்களுக்கும் உண்டு.
- அனைத்து மாணவர்களும் அவர்களை ஆதரிக்கும் ஊழியர்களும் பாதுகாப்பான, ஏற்றுக்கொள்ளும், வரவேற்கும், பத்திரமான மற்றும் ஊக்கமளிக்கும் ஒரு சூழலுக்கு உரிமை உள்ளவர்கள்.
- அனைத்து பங்குதாரர்களுடனும்  மாணவர்கள், பாடசாலை, குடும்பம் மற்றும் ஆதரவு சேவைகள் ஆகியோரின் கூட்டாண்மையுடனும் உள்ள அர்த்தமுள்ள ஒத்துழைப்பு அனைத்து மாணவர்களினதும் வெற்றிக்கு அவசியமாகும்.

மேலதிகத் தகவல்களுக்கு, TDSB இன் சிறப்புக் கல்வித் திட்டத்தைத்  தயவுசெய்து பார்வையிடவும்.

## சிறப்புக் கல்வித் திட்டங்கள்

கல்விச் சட்டத்தில் பின்வரும் சிறப்புக் கல்வித் திட்டங்கள், கல்வித் திட்டங்களாக வரையறுக்கப்பட்டுள்ளன:

- தொடர்ச்சியான மதிப்பீடு மற்றும் கணிப்பீட்டின் முடிவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு மாற்றியமைக்கப்படக்கூடிய திட்டம்; மற்றும்
- விதிவிலக்கான மாணவரின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய குறிப்பிட்ட நோக்கங்கள் மற்றும் சிறப்புக் கல்விச் சேவைகளைக் கோடிட்டுக் காட்டும் ஒரு திட்டத்தை (தனிப்பட்ட கல்வித் திட்டம் அல்லது)IEP என அழைக்கப்படும் ( உள்ளடக்கும் ஒரு திட்டம்.

## சிறப்புக் கல்விச் சேவைகள்

சிறப்புக் கல்வித் திட்டங்களை உருவாக்குவதற்கும் செயல்படுத்துவதற்கும் தேவைப்படும் உதவியை வழங்கக்கூடிய பணியாளர்கள் மற்றும் உபகரணங்கள் உள்ளிட்ட வசதிகள் மற்றும் வளங்கள் என்பன சிறப்புக் கல்விச் சேவைகள் எனக் கல்விச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது.

## TDSB வழங்கும் சிறப்புக் கல்வித் திட்டங்கள் மற்றும் சேவைகள்

மாணவர்களின் தேவைகள் தெளிவாக அடையாளம் காணப்படுவதையும், அவர்களுக்குப் பொருத்தமான கல்வித் திட்டங்கள் மற்றும் சேவைகள் வழங்கப்படுவதையும் உறுதிசெய்யும் வகையில், வழக்கமான வகுப்பறையில், பிரத்தியேகமான ஒரு அமைப்பில் இடம்பெறும் அல்லது இரண்டும் சேர்ந்த அமைப்பிலும் இடம்பெறும், பல திட்டங்கள் மற்றும் சேவைகளை TDSB வழங்கி வருகின்றது. TDSPஇன் சிறப்புக் கல்வித் திட்டமானது , "விதிவிலக்கான " ஒன்றாகக் கருதப்பட்டாலும் இல்லாவிட்டாலும் (IPRCயால் முறைப்படி அடையாளம் காணப்பட்டதன்படி) பயனுள்ள சிறப்புக் கல்வித் திட்டங்கள் மற்றும் சேவைகளை மேம்படுத்துதல், செயல்படுத்துதல் மற்றும் தொடர்ந்து வழங்குதல் ஆகியவற்றில் சபையின் உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கின்றது.

## விதிவிலக்கான மாணவர்கள்

"நடத்தை, தொடர்பாடல், அறிவுசார் மற்றும் உடல்சார் அல்லது பல்வேறு விதிவிலக்குகளைக் கொண்டிருக்கும் சிறப்புக் கல்வித் திட்டம் ஒன்றில் இடம் பெற வேண்டும் என்று கருதப்படும் ஒரு மாணவர்" ஒரு விதிவிலக்கான மாணவர் என்று கல்விச் சட்டம் வரையறுக்கின்றது. கல்வி அமைச்சினால் வழங்கப்படும் விதிவிலக்குகளின் வகைகள் மற்றும் வரையறைகள் ஆகியவற்றின்படி, இனங்காணல், பயிற்சித் திட்டம் மற்றும் மறுஆய்வுக் குழு (Identification, Placement and Review Committee (IPRC)) இன் செயன்முறை மூலம் இந்த மாணவர்கள் இனம் காணப்படுகிறார்கள். இந்த வகைகளில் நடத்தை, தொடர்பாடல், அறிவுசார் மற்றும் உடல்சார் விதிவிலக்குகள் ஆகியவை உள்ளடங்கும்.

## இனங்காணல், பயிற்சித் திட்டம் மற்றும் மறுஆய்வுக் குழு (Identification, Placement and Review Committee (IPRC))

விதிவிலக்கான மாணவர்களாக முறைப்படி இனங்காணப்பட்ட மாணவர்களுக்குப் பாடசாலைச் சபைகள் சிறப்புக் கல்வித் திட்டங்கள் மற்றும் சேவைகளை வழங்க வேண்டும். இது கல்விச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இனங்காணல், பயிற்சித் திட்டம் மற்றும் மறுஆய்வுக் குழு - IPRC ஆல் தீர்மானிக்கப்படும் சிறப்புக் கல்வித் திட்டங்கள் அல்லது சேவைகள் தேவைப்படும், நடத்தை, தொடர்பாடல், அறிவுசார், உடல்சார் அல்லது பல்வேறு விதிவிலக்குகளைக் கொண்ட ஒரு மாணவரே விதிவிலக்கான மாணவராவார். பாடசாலைச் சபைகள் அனைத்தும் IPRC களை நிறுவ வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

IPRC:

- மாணவர் விதிவிலக்கானவராக அடையாளம் காணப்பட வேண்டுமா என்பதைத் தீர்மானிக்கின்றது;
- மாணவர்களின் விதிவிலக்கான தன்மைகளை இனங்கண்டு கொள்கின்றது;
- மாணவருக்குப் பொருத்தமான பயிற்சித் திட்டத்தைத் தீர்மானிக்கின்றது; அத்துடன்
- ஒவ்வொரு கல்வியாண்டிலும் ஒருமுறையாவது மாணவரின் அடையாளம் மற்றும் பயிற்சித் திட்டத்தை மதிப்பாய்வு செய்கின்றது.

### IPRCயை எவ்வாறு வேண்டிக்கொள்ள முடியும்?

IPRC ஒன்றைப் பாடசாலை அதிபர் அல்லது பெற்றோர் எழுத்து மூலம் கோரலாம். பாடசாலை அதிபர் :

- உங்கள் பிள்ளை ஒரு சிறப்புக் கல்வித் திட்டத்தின் மூலம் பயனடையலாம் என்று பாடசாலை அதிபர் நம்பும் போது, பாடசாலை ஆதரவுக் குழுவுடன் (SST) கலந்தாலோசித்து, உங்களுக்குரிய எழுத்துபூர்வ அறிவிப்புடன், உங்கள் பிள்ளையை IPRCக்கு அனுப்பும்படி பரிந்துரை செய்யக்கூடும்;
- உங்கள் எழுத்துபூர்வமான கோரிக்கையைப் பெற்றவுடன், உங்கள் பிள்ளைக்குரிய IPRC சந்திப்பைக் கோர வேண்டும்;
- உங்கள் கோரிக்கையைப் பெற்ற அல்லது உங்களுக்கு அறிவிப்பை வழங்கிய 15 நாட்களுக்குள் இந்த வழிகாட்டியின் பிரதியையும் IPRC எப்போது சந்திக்கும் என்பது பற்றிய எழுத்துபூர்வ அறிக்கையையும் அதிபர் உங்களுக்கு வழங்க வேண்டும்.

### IPRC சந்திப்பு ஒன்றில் யார் கலந்துகொள்ள முடியும்?

IPRC ஒன்றில் ஆகக் குறைந்தது மூன்று பேர் இருக்க வேண்டும், அவர்களில் ஒருவர் பாடசாலை அதிபர் அல்லது சபையின் மேற்பார்வை அதிகாரியாக இருக்க வேண்டும். குழுவின் மற்ற உறுப்பினர்கள் பின்வரும் நபர்களை உள்ளடக்கலாம்:

- பெற்றோர்/பாதுகாவலர்கள்/பராமரிப்பாளர்கள் மற்றும் மாணவர் (மாணவர்கள் தகுந்த முறையில் கலந்து கொள்ள வரவேற்கப்படுகிறார்கள் மற்றும் 16 அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொள்ளவும் கலந்துரையாடல்களில் பங்கேற்கவும் உரிமை உண்டு);
- பிள்ளையின் பாடசாலை அதிபர்/மேற்பார்வை அதிகாரி;
- மாணவரை நன்கு அறிந்த ஆசிரியர்(கள்), சிறப்புக் கல்விப் பணியாளர்கள், சபையின் உதவிப் பணியாளர்கள் அல்லது கூடுதல் தகவல் அல்லது தெளிவுபடுத்தல் வழங்கக்கூடிய ஏஜென்சிப் பிரதிநிதி போன்ற பிற ஆதாரப் பணியாளர்கள்;
- தேவைப்படுமிடத்தில், பாடசாலை அதிபர் அல்லது பெற்றோரால் ஏற்பாடு செய்யப்படும் மேலதிக ஆதாரப் பணியாளர்கள், (உதாரணமாக, சிறப்புக் கல்வி மற்றும்/அல்லது சிறப்புக் கல்வி ஒருங்கிணைப்பாளர் அல்லது உளவியலாளர் போன்ற தொழில்முறை ஆதரவுச் சேவைகள் ஊழியர்கள்)
- மொழிபெயர்ப்பாளர் ஒருவர் (தேவைப்படும்போது);

- பெற்றோரால் அழைக்கப்பட்டால், ஆதரவை வழங்க அல்லது அவர்கள் சார்பாகப் பேசக்கூடிய ஒரு இடைநிலையாளர்.

### IPRC சந்திப்பில் பெற்றோர் கலந்து கொள்ளலாமா?

சட்டவிதிமுறை 181/98, பெற்றோர் மற்றும் 16 வயது அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர்களுக்குப் பின்வருவனவற்றுக்கான உரிமையை வழங்குகின்றது:

- உங்கள் பிள்ளையைப் பற்றிய குழுவினரின் கலந்துரையாடல்கள் அனைத்திலும் கலந்துகொள்வதற்கு;
- குழுவினர் அடையாளப்படுத்தும்போதும் பயிற்சித்திட்ட முடிவு எடுக்கும் போதும் உடனிருப்பதற்கு.

### பெற்றோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ள முடியாவிட்டால் என்ன செய்வது?

வேறொரு திகதி அல்லது நேரத்தை ஏற்பாடு செய்வதற்கு அல்லது நீங்கள் கலந்துகொள்ள முடியாது என்பதைத் தெரியப்படுத்துவதற்குத் தயவுசெய்து உங்கள் பிள்ளையின் பாடசாலை அதிபரைத் தொடர்பு கொள்ளவும். சந்திப்பைத் தொடர்ந்து குழுவின் முடிவுகளை உங்களுக்குத் தெரியப்படுத்துவதற்குப் பாடசாலை அதிபர் உங்களைத் தொடர்புகொள்வார், மேலும் உங்கள் பரிசீலனைக்காக, அடையாளப்படுத்துதல் மற்றும் பயிற்சித்திட்டம் தொடர்பான IPRC இன் முடிவு குறித்த எழுத்துபூர்வ அறிக்கையை உங்களுக்கு அனுப்பி வைப்பார்.

### IPRC சந்திப்பில் வேறு யார் கலந்துகொள்ள முடியும்?

உங்கள் பிள்ளையின் பாடசாலை அதிபர் (அல்லது உப அதிபர்) கலந்துகொள்வார் IPRC சந்திப்பில் பின்வருபவர்களைப் போன்றவர்களின் வருகையை நீங்கள் அல்லது பாடசாலை அதிபர் கோரலாம்.

- உங்கள் பிரதிநிதி (உங்களுக்கு ஆதரவளிக்கும் அல்லது உங்கள் சார்பாக அல்லது உங்கள் பிள்ளையின் சார்பாகப் பேசக்கூடிய ஒரு நபர்);
- மேலதிகத் தகவல்களை அல்லது தெளிவுபடுத்தலை வழங்கக்கூடிய உங்கள் பிள்ளையின் ஆசிரியர், சிறப்புக் கல்விப் பணியாளர்கள், சபையின் ஆதரவுப் பணியாளர்கள் அல்லது ஏஜென்சியின் பிரதிநிதி போன்ற ஆதரவளிக்கும் பிற நபர்கள்;

- ஒரு மொழிபெயர்ப்பாளர் அல்லது மொழிவிளக்குபவர் (உங்கள் பிள்ளையின் பாடசாலை அதிபர் மூலம் மொழிபெயர்ப்பாளர் அல்லது மொழிவிளக்குபவர் ஒருவரின் சேவைகளை நீங்கள் கோரமுடியும்).

**IPRC சந்திப்பைக் குறித்துப் பெற்றோர்கள் பெற்றுக்கொள்ளும் தகவல்கள் எவை?**

IPRC பற்றிய அறிவிப்பை உங்களுக்கு வழங்கிய அல்லது உங்கள் கோரிக்கையைப் பெற்ற 15 நாட்களுக்குள், IPRC எப்போது சந்திக்கும் என்பது குறித்த எழுத்துப்பூர்வமான அறிவிப்பைப் பாடசாலை அதிபர் உங்களுக்கு வழங்குவார். சந்திப்புக்குக் குறைந்தபட்சம் பத்து நாட்களுக்கு முன்னராக, உங்கள் பிள்ளையின் பயிற்சித் திட்டத்தைக் கருத்திற் கொள்வதில் ஒரு முக்கியமான பங்காளராக இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளும் அழைப்பை நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள். சந்திப்பின் திகதி, நேரம் மற்றும் இடம் ஆகியவற்றை இந்தக் கடிதம் உங்களுக்குத் தெரிவிக்கும், மேலும் நீங்கள் கலந்துகொள்வீர்களா இல்லையா என்பதைக் குறிப்பிடும்படியும் அது கேட்டுக்கொள்ளும். IPRC சந்திப்பு நிகழும் முன்னர், உங்கள் பிள்ளை பற்றி IPRC இன் உறுப்பினர்கள் பெற்றுக்கொண்ட தகவல்களின் எழுத்துப்பூர்வப் பிரதியைப் பெற்றுக்கொள்வீர்கள். இதில் மதிப்பீடுகளின் முடிவுகள் அல்லது தகவல்களின் சுருக்கம் இருக்கலாம்.

**IPRC சந்திப்பின் நடைமுறை அமைப்பு**

**IPRC சந்திப்பின் போது**

IPRC இன் தலைவர் பெற்றோரை வரவேற்றுக் குழு உறுப்பினர்களை அறிமுகப்படுத்திச் சந்திப்பைத் தொடங்குவார். பின்னர் பெற்றோர்கள் தங்களையும் தங்கள் விருந்தினர்களையும் அறிமுகப்படுத்த வாய்ப்புக் கிடைக்கும். IPRC தலைவர் சந்திப்பின் நோக்கத்தைக் கோடிட்டுக் காட்டுவார்.
அதற்குப் பின்னர் குழு:

- மாணவர் பற்றித் தொடர்புடைய தகவல்கள் அனைத்தையும் மதிப்பாய்வு செய்யும்;
- உங்கள் பிள்ளையின் கல்வி மதிப்பீட்டைக் கவனத்திலெடுக்கும்;
- தேவைப்பட்டால், உங்கள் பிள்ளையின் உடல்நலம் அல்லது உளவியல் மதிப்பீட்டைக் கவனத்திலெடுக்கும்;

- நீங்கள் அல்லது உங்கள் பிள்ளை (16 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தால்) சமர்ப்பிக்கும் எந்த தகவலையும் கருத்திலெடுக்கும்; அத்துடன்
- உங்கள் பிள்ளையின் பலம் மற்றும் வளர்ச்சி தேவைப்படும் பகுதிகளைப் பற்றிக் கலந்துரையாடும்.

உங்கள் பிள்ளைக்கான சிறப்புக் கல்வித் திட்டங்கள் அல்லது சேவைகள் பற்றிக் குழு எந்த முன்மொழிவையும் கலந்துரையாடக்கூடும்.

அனைத்துத் தகவல்களும் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுப் பரிசீலிக்கப்பட்டவுடன், IPRC பின்வரும் முடிவுகளை மேற்கொள்ளும்:

1. உங்கள் பிள்ளை விதிவிலக்கான தேவையுள்ள ஒருவராக அடையாளம் காணப்பட்டால். ஆம் எனில், ஒன்ராறியோவின் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள விதிகளின்படி விதிவிலக்கான தேவையின் வகை மற்றும் வரையறையைப் பற்றிக் குழு குறிப்பிட வேண்டும்;
2. விதிவிலக்கான தேவையுள்ளவராக அடையாளம் காணப்படும் உங்கள் பிள்ளைக்கு மிகவும் பொருத்தமான பயிற்சித் திட்டம்.

சிறப்புக் கல்வி வகுப்பில் அமர்த்துவதெனக் கருத முன்னர், விதிவிலக்கான தேவையுள்ள மாணவர்களை வழக்கமான வகுப்புகளில் சேர்ப்பதைப் பாடசாலைச் சபைகள் பரிசீலிக்க வேண்டும் என்று ஒன்ராறியோவின் சட்டவிதிமுறை 181/98 கேட்டுக்கொள்கின்றது. சிறப்புக் கல்விப் பயிற்சித் திட்டம் தேவை என்று குழு முடிவு செய்தால், பொருத்தமான சிறப்புக் கல்வி ஆதரவுடன் வழக்கமான வகுப்பில் இடம் பெறும் பயிற்சித் திட்டம் உங்கள் பிள்ளையின் தேவைகளைப் பூர்த்தி செய்யுமா என்பதை முதலில் பரிசீலிக்கும்.

| **பயிற்சித் திட்டம் குறித்த முடிவு** | |
|---|---|
| **பயிற்சித் திட்டம்** | **வரையறை** |
| **மறைமுகமான சேவையுடன் கூடிய வழக்கமான வகுப்பறை** | நாள் முழுவதும் மாணவர் வழக்கமான வகுப்பில் வைக்கப்படுகிறார், மேலும் ஆசிரியர் சிறப்பு ஆலோசனைக்குரிய சேவைகளைப் பெற்றுக்கொள்கிறார். |

| | |
|---|---|
| **ஆதார உதவியுடன் வழக்கமான வகுப்பறை (*மழலையர் பள்ளி முதல் 8ம் வகுப்பு வரை*)** | மாணவர் பெரும்பாலான நேரத்துக்கு அல்லது நாள் முழுவதும் வழக்கமான வகுப்பில் வைக்கப்பட்டு, தகுதிவாய்ந்த சிறப்புக் கல்வி ஆசிரியரிடமிருந்து வழக்கமான வகுப்பறையில் தனித்தனியாகவோ அல்லது சிறு குழுவாகவோ சிறப்பு அறிவுறுத்தலைப் பெற்றுக்கொள்கிறார். |
| **உதவியைத் திரும்பப் பெறுதலுடன் கூடிய வழக்கமான வகுப்பறை** | மாணவர் வழக்கமான வகுப்பில் வைக்கப்பட்டு, வழக்கமான வகுப்பறைக்கு வெளியே பள்ளி நாளின் ஒரு பகுதிக்குச் சிறப்புக் கல்வி ஆசிரியரிடம் இருந்து அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்கிறார். |
| **பகுதியளவில் ஒருங்கிணைந்த வகுப்பு** | மாணவர் ஒரு சிறப்புக் கல்வி வகுப்பில் வைக்கப்பட்டுத் தயார் நிலையின் அடிப்படையில் பள்ளி நாளின் ஒரு பகுதிக்கு தினமும் குறைந்தபட்சம் ஒரு அறிவுறுத்தல்)நேரத்துக்கு ( .வழக்கமான வகுப்பில் ஒருங்கிணைக்கப்படுகிறார் |
| **முழுவதுமாகச் சுய கட்டுமானச் சிறப்புக் கல்வி வகுப்பு கூட்டப்பட்ட) (தளங்கள்** | மாணவர் பள்ளி நாள் முழுவதும் சுயகட்டுமான-ச் சிறப்புக் கல்வி வகுப்பில் இருக்கிறார். |

உங்கள் பிள்ளையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேறு தெரிவுகள் இருக்கலாம். செவிப்புலனற்ற, பார்வைப்புலனற்ற, அல்லது செவிப்புலனும் பார்வைப்புலனும் அற்ற மாணவர்களுக்கான மாகாணப் பாடசாலை அல்லது கடுமையான கற்றல் குறைபாடுகள் உள்ள மாணவர்களுக்கான செயல்விளக்கப் பள்ளி போன்ற தெரிவுகளை ஆராய உங்கள் பிள்ளையின் பாடசாலை அதிபரை நீங்கள் தொடர்பு கொள்ளலாம். செயல் விளக்கப் பாடசாலைகள் பற்றிய கூடுதல் தகவல்களை இந்தச் சிற்றேட்டின் பிற்பகுதியில் காணலாம்.

**முடிவு குறித்த அறிக்கை**

ஒவ்வொரு IPRC சந்திப்பிலும் முடிவு குறித்த அறிக்கை பூர்த்தி செய்யப்படும். சிறப்புக் கல்வி வகுப்பில் இடம் பெறுவது தீர்மானிக்கப்பட்டால், அதற்குரிய காரணங்களை IPRC அதன் எழுத்துபூர்வ அறிக்கையில் குறிப்பிட வேண்டும். IPRC இன் எழுதப்பட்ட முடிவுபற்றிய அறிக்கையில் பின்வருவன அடங்கும்:

- உங்கள் பிள்ளையின் பலம் மற்றும் வளர்ச்சி தேவைப்படும் பகுதிகள்;
- அடையாளம் காணப்பட்ட ஏதேனும் விதிவிலக்கான தன்மைகளின் வகைகள் மற்றும் வரையறைகள்;
- மாணவரின் பலம் மற்றும் வளர்ச்சி தேவைப்படும் பகுதிகள் பற்றிய IPRC இன் விளக்கம்;
- IPRC இன் பயிற்சித் திட்டம் குறித்த முடிவு;
- சிறப்புக் கல்வித் திட்டம் மற்றும் சிறப்புக் கல்விச் சேவைகள் தொடர்பான IPRC இன் பரிந்துரைகள்; மற்றும்
- அந்த மாணவர் சிறப்புக் கல்வி வகுப்பில் சேர்க்கப்பட வேண்டும் என்று IPRC முடிவு செய்திருந்தால், அந்த முடிவிற்கான காரணங்கள்.

IPRC ஆல் எடுக்கப்படும் அடையாளம் காணப்படல் மற்றும் பயிற்சித் திட்டம் குறித்த முடிவுகளுடன் உடன்பாட்டைக் குறிக்கும் வகையில், IPRC முடிவு குறித்த அறிக்கையில் கையொப்பமிடுமாறு பெற்றோர்கள் கேட்கப்படுவார்கள். முடிவு குறித்த அறிக்கை IPRC கூட்டத்தில் கையொப்பமிடப்படலாம் அல்லது மேலதிகப் பரிசீலனைக்காக வீட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டுப் பின்னர் பிள்ளையின் பாடசாலை அதிபருக்குத் திருப்பி அனுப்பப்படலாம்.

**IPRC சந்திப்புக்குப் பின்னர்**

உங்கள் பிள்ளை விதிவிலக்கான தன்மைகளைக் கொண்டவர் என IPRC கண்டறிந்து, IPRC இன் அடையாளம் காணப்படல் மற்றும் பயிற்சித் திட்டம் குறித்த முடிவை நீங்கள் ஏற்றுக்கொண்டால், சிறப்புக் கல்வித் திட்டம் வழங்கப்படும் பாடசாலை அதிபருக்குத் தனிப்பட்ட கல்வித் திட்டத்தை (IEP) உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து அறிவிக்கப்படும்.

**IPRC இன் முடிவை ஏற்றுக்கொள்ளாவிட்டால் பெற்றோர்கள் என்ன செய்ய முடியும்?**

IPRC ஆல் எடுக்கப்பட்ட அடையாளம் காணப்படல் மற்றும் பயிற்சித் திட்டம் குறித்த முடிவை நீங்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால், நீங்கள்:

- முடிவைப் பெற்றுக்கொண்ட 15 நாட்களுக்குள், உங்கள் கரிசனைகளைப் பற்றிக் கலந்தாலோசிக்கவும் முடிவுகளை மறுபரிசீலனை செய்யவும் இரண்டாவது கூட்டத்தை நடத்துமாறு IPRC இடம் கேட்டுக்கொள்ளலாம்; அல்லது
- முடிவு கிடைத்த 30 நாட்களுக்குள், மேல்முறையீடு குறித்த அறிவிப்பைப் பாடசாலைச் சபையிடம் தாக்கல் செய்யலாம்.

இரண்டாவது சந்திப்புக்குப் பிறகும், அந்த முடிவை நீங்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால், இரண்டாவது சந்திப்பின் முடிவைப் பெற்ற 15 நாட்களுக்குள், மேல்முறையீட்டு அறிவிப்பைத் தாக்கல் செய்யலாம்.

நீங்கள் IPRC முடிவை ஏற்றுக்கொள்ளவில்லை மற்றும் நீங்கள் மேல்முறையீடு செய்யவில்லை எனில், IPRC முடிவைச் செயல்படுத்துமாறு சபை அதிபருக்கு அறிவுறுத்தும்.

**IPRC முடிவைக் குறித்துப் பெற்றோர்கள் மேல்முறையீடு செய்வது எப்படி?**

உங்கள் பிள்ளை விதிவிலக்கான தன்மைகள் உள்ளவராக IPRC இனால் அடையாளம் காணப்பட்டதுடன் அல்லது IPRC இன் பயிற்சித் திட்டம் குறித்த முடிவுடன் நீங்கள் உடன்படாவிட்டால், மேலே விவரிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள், அந்த முடிவை மேல்முறையீடு செய்வதற்கான உங்கள் உத்தேசத்தை எழுத்துபூர்வமாக அறிவிக்கலாம். இந்த எழுத்துபூர்வ அறிவிப்பு பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்:

Director and Secretary Treasurer
Toronto District School Board
5050 Yonge Street
Toronto, ON M2N 5N8

மேல்முறையீட்டு அறிவிப்பு கண்டிப்பாக:

- நீங்கள் உடன்படாத முடிவு(கள்) பற்றிக் குறிப்பிடவும்; அத்துடன்
- உடன்படாததற்குரிய காரணங்களை விளக்கும் ஒரு அறிக்கையைச் சேர்க்கவும்.

மேல்முறையீட்டுச் செயற்பாட்டில் என்ன நடக்கிறது?

மேல்முறையீட்டுச் செயன்முறை பின்வரும் படிமுறைகளை உள்ளடக்கியது:

உங்கள் மேல்முறையீட்டை விசாரிப்பதற்குச் சபை ஒரு சிறப்புக் கல்வி மேல்முறையீட்டுச் சபையை நிறுவும். இந்த மேல்முறையீட்டுச் சபையானது மேல்முறையீட்டின் கீழ் உள்ள விடயத்தைப் பற்றி முன்னறிவு இல்லாத மூன்று நபர்களைக் கொண்டிருக்கும். இந்த மூவரில் ஒருவரை நீங்களும், ஒருவரைச் சபையும் தேர்ந்தெடுக்க வேண்டும். (உறுப்பினர் பற்றி மேலும் அறிவதற்குச், சட்டவிதிமுறை 181/98 ஐப் பார்வையிடவும்).

மேல்முறையீட்டுச் சபையின் தலைவர், அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட 30 நாட்களுக்குப் பிந்தாமல் இதில் சம்பந்தப்பட்டிருப்பவர்களுக்கு வசதியான ஒரு நேரத்திலும் இடத்திலும் இடம்பெறும் வண்ணம் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்வார். (பிந்திய ஒரு திகதிக்கு அதனை மாற்றுமாறு பெற்றோர் மற்றும் சபை எழுத்துபூர்வமாகக் கேட்டுக்கொள்ளாத வரையில் இது இடம்பெறும்)

மேல்முறையீட்டுச் சபை IPRC ஆல் மதிப்பாய்வு செய்யப்பட்ட உள்ளடக்கத்தைப் பெறும் மற்றும் மேல்முறையீட்டின் கீழ் உள்ள விடயத்தைப் பற்றிய தகவல்களை வழங்கக்கூடிய எந்தவொரு நபரையும் நேர்காணல் செய்யலாம்.

பெற்றோராகிய  உங்களுக்கும் உங்கள் பிள்ளைக்கு (அவன் அல்லது அவள் 16 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருந்தால்) கலந்துகொள்ளவும் சகல கலந்துரையாடல்களிலும் பங்கேற்கவும் உரிமை உண்டு.

இந்தச் சந்திப்பு முடிந்த 3 நாட்களுக்குள் மேல்முறையீட்டுச் சபை தனது பரிந்துரையை அளிக்க வேண்டும். அது பின்வருமாறு இருக்கலாம்:

- IPRC உடன் உடன்பட்டு, முடிவை நடைமுறைப்படுத்துமாறு பரிந்துரைக்கலாம், அல்லது
- IPRC முடிவுடன் உடன்படாமல் உங்கள் பிள்ளையின் அடையாளம் அல்லது பயிற்சித் திட்டம் அல்லது இரண்டையும் பற்றிச் சபைக்குப் பரிந்துரை செய்யலாம்.

மேல்முறையீட்டுச் சபை அதன் பரிந்துரைகளுக்கான காரணங்களை வழங்கி உங்களுக்கும் பாடசாலைச் சபைக்கும் அதன் பரிந்துரைகளை எழுத்துபூர்வமாகத் தெரிவிக்கும்.

மேல்முறையீட்டுச் சபையின் எழுத்துபூர்வ அறிக்கையைப் பெற்ற 30 நாட்களுக்குள், பரிந்துரைகள் தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைப் பாடசாலைச் சபை முடிவு செய்யும். (மேல்முறையீட்டுச் சபையின் பரிந்துரையை பாடசாலைச் சபைகள் பின்பற்ற வேண்டிய தேவையில்லை)

பாடசாலைச் சபையின் முடிவை நீங்கள் ஏற்கலாம் அல்லது சிறப்புக் கல்வித் தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்யலாம். சிறப்புக் கல்வித் தீர்ப்பாயத்தின் செயலாளருக்கு எழுதுவதன் மூலம் நீங்கள் ஒரு விசாரணையைக் கோரலாம். தீர்ப்பாயத்திற்கு விண்ணப்பம் செய்வது பற்றிய தகவல்கள் மேல்முறையீட்டுச் சபையின் முடிவோடு சேர்க்கப்படும்.

**ஒரு பிள்ளை சிறப்புக் கல்வித் திட்டம் ஒன்றில் சேர்க்கப்பட்டவுடன், பயிற்சித் திட்டத்தை மீளாய்வு செய்ய முடியுமா?**

சிறப்புக் கல்வித் திட்டம் வழங்கப்படும் பாடசாலையின் அதிபர், வருடாந்த மதிப்பாய்வு ஒன்றுக்குரிய எழுத்துபூர்வ அறிவிப்பைப் பெற்றோரான உங்களிடமிருந்து பெறாவிட்டால், IPRC மதிப்பாய்வு ஒன்று அந்தக் கல்வியாண்டுக்குள் நடத்தப்படும். உங்கள் பிள்ளை மூன்று மாதங்களுக்குச் சிறப்புக் கல்வித் திட்டத்தில் இருந்த பிறகு எந்த நேரத்திலும் IPRC சந்திப்புக்கான மதிப்பாய்வுக் கோரிக்கை முன்வைக்கப்படலாம்.

**மதிப்பாய்வில் எதனைக் கருத்திற் கொண்டு IPRC முடிவு செய்கின்றது?**

மதிப்பாய்வை நடத்தும் IPRC, முந்தைய IPRC ஆல் முதலில் கருதப்பட்ட அதே வகையான தகவல்களைக் கருத்திற் கொள்ளும். சிறப்புக் கல்வித் திட்டத்தில் உங்கள் பிள்ளை பெற்றுள்ள முன்னேற்றத்தையும் இது பரிசீலிக்கும் மற்றும் உங்கள் எழுத்துபூர்வ அனுமதியுடன், IEPஐக் குறிப்பிடும்.

IPRC பயிற்சித் திட்டம் மற்றும் அடையாளப்படுத்தல் முடிவுகளை மதிப்பாய்வு செய்து, அவை தொடர வேண்டுமா அல்லது வேறு முடிவு எடுக்கப்பட வேண்டுமா என்பதை முடிவு செய்யும்.

TDSB இல் உள்ள சிறப்புக் கல்வி பற்றிய பதில் கிடைக்காத கேள்விகள் இருந்தால், TDSB இணையத்தளத்தைப் பார்வையிடவும் அல்லது உங்கள் உள்ளூர்ப் பாடசாலை அதிபரைத் தொடர்பு கொள்ளவும்.

மேலதிகத் தகவல்களுக்கு, TDSB இன் இனங்காணல், பயிற்சித் திட்டம் மற்றும் மறுஆய்வுக் குழு (Identification Placement and Review Committees (IPRC) இன் பெற்றோர்/பாதுகாவலர்கள்/பராமரிப்பாளர்களுக்குரிய வழிகாட்டியைத் தயவுசெய்து பார்வையிடவும்.

## தனிப்பட்ட கல்வித் திட்டம்

தனிப்பட்ட கல்வித் திட்டம் )IEP) என்பது ஒரு மாணவர் பெற்றுக்கொள்ளும் சிறப்புக் கல்வித் திட்டங்கள், சேவைகள் அல்லது மேலதிக ஆதரவை விவரிக்கும் ஒரு திட்டமாகும். எழுதப்பட்டுள்ள இந்தத் திட்டமானது, ஒரு மாணவரின் பலம் மற்றும் வளர்ச்சிக்கான பகுதிகளையும் அத்துடன் சிறப்புக் கல்வித் திட்டம், மாணவரின் தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய அனுகப்படும் அல்லது வழங்கப்படும் ஆதரவுகள் மற்றும் சேவைகளையும் விவரிக்கும் ஒரு செயற்படும் ஆவணமாகும்.

ஒரு மாணவரின் முன்னேற்றத்தைக் கண்காணித்து மதிப்பிடுவதற்கு IEP உதவுகின்றது, மேலும் அந்த மாணவரின் வளர்ச்சிக்கான பகுதிகளில் ஏற்படும் மாற்றத்திற்கு ஏற்ப சரிசெய்யப்படுகிறது. ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்திலும் இது மதிப்பாய்வு செய்யப்பட்டுப் புதுப்பிக்கப்படும்.

பெற்றோருடன் கலந்தாலோசித்து IEP உருவாக்கப்பட வேண்டும். இதில் கண்டிப்பாகப் பின்வருவன இருக்க வேண்டும்:

- அனுசரணை வசதிகள் அறிவுறுத்தலின் போது பொதுவாக வழங்கப்படும் - உத்திகள் மற்றும் ஆதரவுகளிலிருந்து வேறுபட்டவை ;
- குறிப்பிட்ட மற்றும் கணிப்பிடக்கூடிய பொருத்தமான கல்வி எதிர்பார்ப்புகள்;
- சிறப்புக் கல்வித் திட்டம் மற்றும் பெறப்படும் சேவைகளின் சாராம்சம்;
- உங்கள் பிள்ளையின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதற்கான முறைகள் பற்றிய அறிக்கை; மற்றும்
- மாணவர்களின் பலம், தேவைகள் மற்றும் தேவையான ஆதரவைக் கட்டமைக்கும் குறிப்பிட்ட இலக்குகள் மற்றும் செயல்களைக் கொண்ட தனிப்பயனாக்கப்பட்ட மாற்றத் திட்டம். ஒரு மாணவருக்கு மாறுதல் திட்டம் தேவையில்லை என்றால், எந்த நடவடிக்கையும் தேவையில்லை என்று திட்டம் குறிப்பிடும்.

ஒரு பிள்ளை சிறப்புக் கல்வித் திட்டத்தில் சேர்க்கப்பட்ட 30 பள்ளி நாட்களுக்குள் IEP முடிக்கப்பட வேண்டும் மற்றும் பெற்றோர்கள் அது குறித்த ஒரு பிரதியைப் பெற்றுக்கொள்வதை அதிபர் உறுதி செய்ய வேண்டும். விதிவிலக்கானவராக முறைப்படி அடையாளம் காணப்படாத ஆனால் சிறப்புக் கல்வித் திட்டங்கள் மற்றும் அல்லது சேவைகள் தேவைப்படும் மாணவர்களுக்காகவும் ஒரு/IEP உருவாக்கப்படலாம்.

அமைச்சின் தனிப்பட்ட கல்வித் திட்ட (IEP) ஆதார வழிகாட்டி மற்றும் TDSB இன் தனிப்பட்ட கல்வித் திட்டங்களுக்கான (IEPs) பெற்றோர்/பாதுகாவலர்கள்/பராமரிப்பாளர்களுக்குரிய வழிகாட்டியைத். தயவுசெய்து பார்வையிடவும்.

## பெற்றோருக்கு உதவக்கூடிய நிறுவனங்கள்

விதிவிலக்கான தேவைகள் உள்ள பிள்ளைகளின் பெற்றோருக்குத் தகவல்கள் மற்றும் ஆதரவை வழங்குவதற்குப் பல உள்ளூர் சங்கங்கள் உள்ளன. அவர்களில் சிலர் குழுவின் சிறப்புக் கல்வி ஆலோசனைக் குழுவின் (SEAC) உறுப்பினர்களாக உள்ளனர். SEAC சங்கங்கள் பற்றிய தகவல்கள் மற்றும் SEAC இன் உறுப்பினர்களை எவ்வாறு தொடர்புகொள்வது என்பது பற்றி SEAC வலைப்பக்கத்தில் காணலாம். கீழே உள்ள அட்டவணை TDSB SEAC இன் உறுப்பினர் அமைப்புகளைப் பட்டியலிடுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **Association for Bright Children** (ABC)<br>*www.abcontario.ca* | **Down Syndrome Association of Toronto** (DSAT)<br>*www.dsat.ca* | **Integration Action for Inclusion in Education and Community**<br>*www.inclusionontario.ca* | **VOICE for Hearing Impaired Children**<br>*www.voicefordeafkids.com* |
| **Autism Society of Ontario** (Toronto Chapter)<br>*www.autismontario.com* | **Easter Seals Ontario**<br>*www.easterseals.org* | **Learning Disabilities Association Toronto District**<br>*www.ldatd.on.ca* | **Centre for ADHD Awareness Canada**<br>**https://caddac.ca/** |
| **Community Living Toronto**<br>*www.communitylivingtoronto.ca* | **Epilepsy Toronto**<br>*www.epilepsytoronto.org* | **Ontario Parents of Visually Impaired Children** (OPVIC)<br>https://www.cnib.ca/en/ontario-parents-visually-impaired-children-opvic?region=gta | **Sawubona Africentric Circle of Support**<br>https://www.sawubonaacs.org/ |

## மாகாணப் பள்ளிகள் மற்றும் விளக்கப் பள்ளிகள் அமைச்சு

செவிப்புலனற்றோர், பார்வைப்புலனற்றோர், செவிப்புலனும் பார்வைப்புலனும் அற்றோர் மற்றும் கடுமையான கற்றல்-குறைபாடுள்ள மாணவர்களுக்காக ஒன்ராறியோ முழுவதும் மாகாணப் பாடசாலைகள் மற்றும் செயல்விளக்கப் பாடசாலைகளைக் கல்வி அமைச்சு இயக்கி வருகின்றது. பொதுவாக IPRC பரிந்துரையின் மூலமாக இதற்குரிய அணுகல் கிட்டும். பாடசாலைச் சபைகளால் வழங்கப்படும் முதன்மையான போக்குவரத்துடன் பகல்நேரப் பள்ளிகளாக இந்தப் பாடசாலைகள் செயல்படுகின்றன. பாடசாலையிலிருந்து வெகு தொலைவில் வசிக்கும் தினசரி பயணம் செய்யும் மாணவர்களுக்குத் திங்கள் முதல் வெள்ளி வரைக்கும் குடியிருப்புப் பாடசாலைகளில் திட்டங்கள் வழங்கப்படுகின்றன.

செயல்விளக்கப் பாடசாலைகள் தீவிரமான கற்றல் குறைபாடுகள் உள்ள மாணவர்களுக்கான தீவிர, ஓராண்டுத் திட்டங்களை வழங்குகின்றன, இதில் கவனப்-பற்றாக்குறைக் கோளாறு (ADHD) உடன் தொடர்புடைய கற்றல் குறைபாடுகளும் அடங்கும்.

ஒவ்வொரு விளக்கப் பாடசாலையிலும் சேவையில் இருக்கும் ஆசிரியருக்குக் கல்வித் திட்டம் வழங்கப்படுகிறது. சேர்க்கைக்கான விண்ணப்பம் பாடசாலை சபையினால் பெற்றோரின் ஒப்புதலுடன் செய்யப்படுகிறது மற்றும் அதற்குரிய தகுதியானது கற்றல் குறைபாடுகளுக்கான மாகாணக் குழுவால் தீர்மானிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **Sagonaska School**<br>350 Dundas Street West,<br>Belleville, ON K8P 1B2<br>Tel: 613-967-2830 | **Trillium School**<br>347 Ontario Street South,<br>Milton, ON L9T 3X9<br>Tel: 905-878-8428 |
| **Amethyst School**<br>1090 Highbury Avenue,<br>London, ON N5Y 4V9<br>Tel: 519-453-4408 | **Centre Jules-Léger**<br>(for French-speaking students)<br>281 rue Lanark, Ottawa,<br>ON K1Z 6R8<br>Tel: 613-761-9300<br>TTY: 613-761-9302/930 |
| **Ernest C. Drury School**<br>255 Ontario Street<br>South Milton, ON L9T<br>Tel: 905-878-2851<br>TTY: 905-878-7195 | **Robarts School**<br>1090 Highbury Avenue,<br>P.O. Box 7360, Station E,<br>London, ON N5Y 4V9<br>Tel/TTY: 519-453-4400 |

| | |
|---|---|
| **Sir James Whitney School**<br>350 Dundas Street<br>West, Belleville, ON K8P 1B2<br>Tel/TTY: 613-967-2823 | **Centre Jules-Léger** (French-language school for the deaf )<br>281 rue Lanark, Ottawa,<br>ON K1Z 6R8<br>Tel: 613-761-9300<br>TTY: 613-761- 9302/9304 |

*செவிப்புலனற்றோர்களுக்கான மாகாணப் பாடசாலைகள், பாலர் நிலை முதல் உயர்நிலைப் பள்ளிப் பட்டப்படிப்பு வரை செவிப்புலனற்ற மாணவர்களுக்கான திட்டங்களையும், குடும்பங்கள், பாடசாலை சபைகள் மற்றும் பிற நிறுவனங்களுக்கான ஆதார சேவைகளையும் வழங்குகிறது. சட்டவிதிமுறை 296 இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்க, மாகாணப் பாடசாலைகளின் சேர்க்கைக் குழுவால் அனுமதி தீர்மானிக்கப்படுகிறது.

விளக்கப் பாடசாலைகள் அல்லது மாகாணப் பாடசாலைகள் பற்றிய மேலதிகத் தகவல்களுக்குத் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்:
Ministry of Education Provincial Schools Branch
255 Ontario Street, South Milton, ON L9T 2M5
Tel: 905-878-2851 Fax: 905-878-5405

## சிறப்புக் கல்வி பற்றிய மேலதிகத் தகவல்கள்

TDSB-யில் உள்ள சிறப்புக் கல்வி பற்றிய விடை தெரியாத கேள்விகள் இருந்தால், TDSB இணையத்தளத்தைப் பார்வையிடவும். உங்கள் பிள்ளையின் பாடசாலை அதிபரையும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

**ரொறன்ரோ மாவட்டப் பாடசாலைச் சபைச் சிறப்புக் கல்வி மற்றும் உள்ளடக்கல் குறித்த இணையத்தளம்**
https://www.tdsb.on.ca/Learning-Equity-and-Well-Being/Special-Education-and-Inclusion

**ரொறன்ரோ மாவட்டப் பாடசாலைச் சபைச் சிறப்புக் கல்வித் திட்டம்**
https://www.tdsb.on.ca/Learning-Equity-and-Well-Being/Special-Education-and-Inclusion/Special-Education-Plan

**கேள்விகள் மற்றும் கரிசனைகளை நிவர்த்தி செய்வதற்கான படிமுறைகள்**
https://www.tdsb.on.ca/Contact-Us/Steps-to-Address-Questions-Concerns

**ரொறன்ரோ மாவட்டப் பாடசாலைச் சபைக்கான சிறப்புக் கல்வி ஆலோசனைக் குழு**
https://www.tdsb.on.ca/Community/How-to-Get-Involved/Advisory-Committees/Statutory-Advisory-Committees/Special-Education-Advisory-Committee.

**ஒன்ராறியோவில் மழலையர் பள்ளி முதல் 12 ஆம் வகுப்பு வரைக்கான சிறப்புக் கல்வி கொள்கை மற்றும் ஆதார வழிகாட்டி -**
https://www.ontario.ca/document/special-education-ontario-policy-and-resource-guide-kindergarten-grade-12